**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 28 Of 2021**

**23.01.2025**

**MW1 – திருமதி. மாலதி**
குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

எந்த வழக்கிற்கு சாட்சியம் அளிக்க எனக்கு அதிகார கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் CP.No.28/2021 வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 2 எதிர்மனுதாரர்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் அளிக்கும் சாட்சியம் 2 எதிர்மனுதாரர்களையும் கட்டுப்படுத்தும் என்றால் சரிதான். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க 2ம் எதிர்மனுதாரர் எனக்கு அதிகார கடிதம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அப்படி இருந்தும் என்னுடைய வாக்குமூலம் 2ம் எதிர்மனுதாரை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

மனுதாரர் என்ன பரிகாரம் கேட்டு CP.No.28/2021 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் 08.11.1986ல் பணியில் சேர்ந்தார் என்றால் மனுதாரர் பயிற்சிக்காக 08.11.1986ல் சேர்ந்துள்ளார். மனுதாரர் பயிற்சிக்காக 08.11.1986ல் சேர்ந்துள்ளதாகவும், அவருக்கு கொடுத்த பயிற்சி விபரம் பற்றியும் எதிர் வழக்குரையிலும், என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மனுதாரர் ஓய்வு பெற்ற தேதி 31.03.2014 என்றால் சரிதான். மனுதாரர் ஓய்வு பெற்றபோது கடைசியாக அவருக்கு கொடுக்கப்பட்ட அடிப்படை சம்பளம் ரூ.,11,945/–, தரஊதியம் ரூ.2,300/–. அதன் பின்னிட்டு ஒப்பந்தத்தின்படி அவரது அடிப்படை சம்பளம் மறு நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்படி மனுதாரது அடிப்படை சம்பளம் ரூ.12,730/–, தரஊதியம் ரூ.2,300/–. மனுதாரரின் அடிப்படை சம்பளத்தையும், தரஊதியத்தையும் தவறாக கணக்கிட்டுள்ளோம்

என்றால், பணியாளர் சம்பளம் குறித்து பணியாளர் பிரிவில் நிர்ணயம் செய்யப்படும். நான் பென்சன் பிரிவில் பணிபுரிகிறேன். என்ன சம்பளம் கொடுக்கிறார்களோ அதற்கேற்ப பென்சன் தொகை நிர்ணயிப்போம். மனுதாரருக்கு முதல் எதிர்மனுதாரர் பணிக்கொடை கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியவில்லை. முதல் எதிர்மனுதாரர் தவறான கணக்கீடு கொடுத்தால் அதன் அடிப்படையில் ஓய்வூதிய தொகை கொடுத்து விடுவோமா என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த கணக்கீட்டை சரிபார்ப்போம் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த கணக்கீட்டை சரிபார்க்காமல் மனுதாரருக்கு தவறான தொகையை கணக்கிட்டு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டது எனறால் சரியல்ல. கணக்கிட்டுதான் கொடுத்துள்ளோம்.

சரியான கணக்கிடு செய்திருந்தால் மனுதாரரின் அடிப்படை சம்பளம் ரூ.13,415/- எனவும், தரஊதியம் ரூ.4,200/- என்றும், இதன் கூட்டுத்தொகை ரூ.17,615/- என கணக்கீடு செய்யப்பட்டிருக்கும் என்றால் இல்லை. மனுதாரருக்கு நிர்ணயம் செய்யப்பட்ட அடிப்படை சம்பளம் மற்றும் தரஊதியம் சரியானது. நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றும் 1ம் எதிர்மனுதாரர் கொடுத்த தவறான கணக்கீட்டின் அடிப்படையில் அதனை சரிபார்க்காமல் மனுதாரருக்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மனுதாரருக்கு சரியான கணக்கீட்டின்படி ஓய்வூதியம் கொடுக்கப்பட்டிருந்தால் அவருக்கு மாதம் அடிப்படை ஓய்வூதியம் ரூ.7,927/- கொடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் கணக்கீடு செய்த தொகை சரியானது. தவறாக கணக்கிட்டு மனுதாரருக்கு அடிப்படை ஓய்வூதியம் மாதம் ரூ.6173/- கொடுக்கப்பட்டுள்ளது என்றால சரியல்ல. செட்டில்மெண்ட்டுக்கு பிறகு மனுதாரருக்கு அடிப்படை ஓய்வூதியம் மாதம் ரூ.6513/- கொடுக்கப்படுகிறது. மனுதாரர் ஓய்வு பெற்ற தேதியான 31.03.2014 அன்று மனுதாரருக்கான ஓய்வூதிய பலன்களை கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே ஓய்வூதிய பலன்களை நாங்கள் கொடுக்கும் வரை 18 சதவிகிதம் வட்டி கேட்க மனுதாரருக்கு உரிமை உள்ளது

என்றால் மனுதாரருக்கு ஏற்கனவே வட்டி தொகை கொடுக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு என்ன தேதியில் எவ்வளவு தொகை ஓய்வூதியமாகவும், வட்டி தொகையாகவூம் கொடுக்கப்பட்டது என்ற விபத்தை ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் காசோலை விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுக்கு கிடைக்கப்பட்ட அடிப்படை ஓய்வூதியத்தின்படிதான் முன்கூட்டிய ஓய்வூதிய தொகை கணக்கிட்டு மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். தவறான அடிப்படை ஓய்வூதிய கணக்கிட்டின்படி முன்கூட்டிய ஓய்வூதிய தொகை மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. முன்கூட்டிய ஓய்வூதிய தொகையில் மனுதாரருக்கு ரூ.84,977/– நிலுவையில் உள்ளது என்றால் இல்லை.

மனுதாரருக்கு அடிப்படை ஓய்வூதியத்துடன் மருத்துவப்படி மற்றும் அரசு நிர்ணயித்த அகவிலைப்படி கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அந்த அடிப்டையில்தான் மனுதாரருக்கு ஓய்வூதிய தொாகை கொடுக்கப்படுகிறது என்றால் இல்லை. Pension Trust Guidlines படி பென்சன் கொடுக்கப்படுகிறது. பென்சன் ட்ரஸ்ட் Guidlines ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். Ex.M8 ஆவணத்தில் Pension Trust Guidlines என கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் அரசாணை எண்.142 கொடுக்கப்பட்டுள்ளது. அது Pension Trust Guidlines கிடையாது என்றால சரிதான். 01.09.1998 ல் ஏற்பட்ட ஒப்பந்தப்படி தொழிலாளர் வைப்பு நிதி நம்பகத்திற்கென்று தனி விதிகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வைப்பு நிதி நம்பகத்தின் செயல்பாடுகளை அதன் விதிகள் மட்டும்தான் கட்டுப்படுத்தும் என்றும், வேறு எதுவும் கட்டுப்படுத்தாது எனவும் சொன்னால் சரிதான்.

மேற்படி விதிகளில் கூறப்பட்ட விபரங்களை தவிர்த்து எந்த ஒரு செயல்பாடு செய்யவேண்டும் என்றாலும் நம்பகத்தின் விதிகளை மாற்றம் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். நம்பக விதிப்படி நம்பக

உறுப்பினர்களுக்கு அரசு நிர்ணயிக்கக்கூடிய அகவிலைப்படியை வழங்கவேண்டும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. நம்பக விதியை பார்த்துதான் சொல்லமுடியும். வைப்பு நிதி நம்பகத்தில் 1ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களையும் மற்றும் தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களையும் உறுப்பினராக சேர்த்துக்கொள்வோம் என்றால் சரிதான். உறுப்பினர்கள் எல்லேருக்குமே அரசு நிர்ணயித்த அகவிலைப்படிதான் கொடுக்கப்படுமா அல்லது நாங்கள் நிர்ணயித்துக்கொள்வோமா என்றால் அரசு நிர்ணயித்த அகவிலைப்படிதான் கொடுக்கப்படவேண்டும்.

தற்போது அரசு நிர்ணயித்துள்ள அகவிலைப்படி 53 சதவீதம். நம்பக உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிற அகவிலைப்படி எவ்வளவு என்றால் 5 சதவீதம் கொடுக்கப்படுகிறது. 5 சதவீதம் அகவிலைப்படி கொடுப்பதாக கூறும் விபரம் பொய்யானது என்றால் சரியல்ல. 5 சதவீதம் அகவிலைப்படி கணக்கிட்டு ஓய்வூதியம் கொடுக்கப்படவேண்டும் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. தற்போதைய ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய அகவிலைப்படி 234 சதவீதம் என்றால் தற்போது ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கு 5 சதவிதம் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. அதன் அடிப்படையில்தான் மனுதாரருக்கு 5 சதவீதம் அகவிலைப்படி கணக்கிட்டு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தற்போது ஓய்வு பெறும் தொழிலாளர்களுக்க 5 சதவீதம் அகவிலைப்படி வழங்கப்படுகிறது. 2016க்கு முன்பு ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு 119 சதவீதம் அகவிலைப்படி கணக்கிடப்பட்டு வழங்குகிறோம். அதேபோல் மனுதாரருக்கும் 119 சதவிதம் அகவிலைப்படி கணக்கிட்டு வழங்கப்படுகிறது. மனுதாரருக்கு தற்போதுவரை ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய அகவிலைப்படி 234 சதவிதம் கொடுக்கவில்லை என்றால் வழக்கு நடைபெறுவதால் வழக்கு

முடிந்தபிறகுதான் அதுபற்றி முடிவு செய்யப்படும். என்ன வழக்கு நிலுவையில் உள்ளது என்றால அகவிலைப்படி சம்பந்தமான வழக்கு. வழக்கு குறித்த விபரம் மற்றும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எந்த வழக்கும் எந்த நீதிமன்றத்திலும்இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் சொனால் இல்லை. அகவிலைப்படி சம்பந்தமாக என்ன வழக்கு எந்த நீதிமன்றத்தில் உள்ளது என்ற விபரத்தை தாக்கல் செய்ய முடியுமா என்றால் சம்பந்தப்பட்ட அலுவலக பிரிவை கேட்டு சொல்லமுடியும். எந்த அலுவலக பிரிவு என்றால் இரண்டு எதிர்மனுதாரர்களின் அலுவலக பிரிவையும் கேட்டு சொல்லமுடியும்.

வைப்பு நிதி நம்பகத்தில் 2016 க்கு முனபு ஓய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு எவ்வளவு அகவிலைப்படி கொடுக்கப்பட்டது என்றால் 119 சதவீதம் கொடுக்கப்பட்டது. அந்த அகவிலைப்படியை தற்போது வரை அதிகரிக்கவில்லை என்றால் சரிதான். அகவிலைப்படி 119 சதவிதத்திற்கு மேல் நம்பகத்தின் எந்த உறுப்பினருக்கும் வழங்கப்படவில்லையா என்றால் தொழிலாளர்களை பொறுத்தவரை 119 சதவீதம்தான் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் தவிர்த்து வேறு யாரெல்லாம் நம்பகத்தின் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்றால் தெரியவில்லை. யாரெல்லாம் நம்பகத்தின் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்ற விபரத்தை கேட்டு வந்து சொல்லமுடியுமா என்றால் முடியும். எங்கள் ட்ரஸ்ட்டில் சாமியப்பன் என்பவர் உறுப்பினராக உள்ளார் என்ற விபரமும், அவருக்கு அகவிலைப்படி 234 சதவிகிதம் வழங்கப்பட்டு வருகிறது என்ற விபரமும் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் உறுப்பினர்கள் வேறு யாராவதற்கு தற்போது அரசு நிர்ணயித்துள்ள 234 சதவிகித அகவிலைப்படியின்படி ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா என்றால் தெரியாது. இந்த விபரத்தை கேட்டு வந்து சொல்லமுடியுமா என்றால் முடியும். நான் எந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியாளராக உள்ளேன் என்றால், தமிழ்நாடு அரசு போக்குவர்த்துக்கழகம்,

சேலத்தில் பணிபுரிகிறேன். 2ம் எதிர்மனுதாரரிடம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில்தான் மேற்சொன்ன சங்கதிகளை சொல்லியுள்ளேனா என்றால் 2ம் எதிர்மனுதாரர் கொடுத்த Instruction Rules Book அடிப்படையில் வாக்குமூலம் கொடுத்துள்ளேன். 2ம் எதிர்மனுதாரர் செயல்பாடு குறித்து நானே சாட்சியம் அளிக்க முடியுமா அல்லது 2ம் எதிர்மனுதாரரின் நிர்வாக அதிகாரி வந்துதான் சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் என்னால் சொல்லமுடியாது. 2ம் எதிர்மனுதாரருக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்குமாறு அதிகார கடிதம் எதுவும் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணையில் சொல்லப்பட்ட சங்கதிகள் குறித்து ஆவணங்கள் மற்றும் விபரங்கள் சொல்வதற்காக வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem